வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : வான்மதி

தேதி 12.10.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

சமுதாயத்தை மறு சீரமைப்பதில் கல்வி உறுதியான வழிமுறையாக திகழ்வதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கான அமெரிக்க தூதரை பிரதமர் திரு நரேந்திர மோடி சந்தித்து பேசினார். அவரது பதவிக்காலத்தில் இரு நாடுகளிடையே நல்லுறவுகள் மேலும் வலுப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் பல்வேறு சாலை மேம்பாட்டு பணிகளை மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி நாளை தொடங்கி வைக்க உள்ளார்.

மகாபாரதத்தை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உதவியுடன் மறுவடிவமைப்பு செய்து, பிரசார் பாரதியின் அதிகாரபூர்வ வேவ்ஸ் ஓடிடி தளத்தில் வெளியிடப்பட உள்ளது.

முர்மு (14)

குஜராத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு நேற்று குஜராத் வித்யாபீட பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று பேசினார். தேசிய சுதேசி இயக்கத்திலும், நாடு தற்சார்பு நிலையை எட்டுவதிலும் மாணவர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். சமுதாயத்தை மறு சீரமைப்பதில் கல்வி உறுதியான வழிமுறையாக திகழ்வதாக அவர் தெரிவித்தார். இந்தியா தற்சார்பு நிலையை அடைவதற்கு மாணவர்கள் தங்களது உறுதியான பங்களிப்பை அளிக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார். இந்த வித்யாபீடம் கல்வி நிலையம் மாணவர்களிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றி வருவதாக அவர் கூறினார். நாட்டை கட்டமைப்பதில் இளைஞர்களின் பங்கு அவசியம் என்றும், நாடு தழுவிய இயக்கமாக தற்சார்பு மற்றும் சுதேசிய இயக்கத்தின் முன்னோடியாக இந்த கல்வி நிலையத்தின் மாணவர்கள் விளங்குவது பாராட்டுதலுக்கு உரியது என்றும் அவர் கூறினார்.

அமெரிக்க தூதர் (12)

இந்தியா அமெரிக்கா இடையேயான நல்லுறவுகள் மேலும் வலுப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். இந்தியாவிற்கான அமெரிக்க தூதர் திரு செர்ஜியோ கோரை

புதுடெல்லியில் நேற்று சந்தித்து பேசினார். இது தொடர்பாக அவர் தமது சமூக ஊடகப்பதிவில், செர்ஜியோ கோரின் பதவிக் காலத்தில் இரு நாடுகளுக்கு இடையேயான உறவு மேலும் வலுப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதேபோல் இந்தியாவிற்கான அமெரிக்க தூதரை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரும் நேற்று சந்தித்து பேசினார். இதுகுறித்து டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், இந்தியா-அமெரிக்கா இடையேயான நட்புறவை அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்வதற்கான அம்சங்கள் குறித்து விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

மோடி-ஆந்த்ரோபிக் (16)

பிரதமர் திரு நரேந்திர மோடி நேற்று புதுடெல்லியில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிறுவனமான ஆந்த்ரோபிக் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி திரு டாரியோ அமோடிசை சந்தித்து பேசினார். இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், ஆந்த்ரோபிக் நிறுவனத்தின் விரிவாக்கத்தை தாம் வரவேற்பதாகவும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பல்வேறு துறைகளில் நடைமுறைப்படுத்த

இருப்பதையும் தாம் வரவேற்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவின் பரவலான தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இளைஞர்களின் பங்களிப்பு போன்றவை அடுத்த கட்ட நடவடிக்கையை உறுதி செய்யும் என்றும் பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய ரயில்வேத் துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ்-ம் ஆந்த்ரோபிக் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியை சந்தித்து பேசினார். இது தொடர்பாக அஸ்வினி வைஷ்ணவ் தமது சமூக வலைதள பதிவில், செயற்கை நுண்ணறிவின் பாதுகாப்பான மற்றும் பொறுப்பான பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கு ஆந்த்ரோபிக் தலைமை நிர்வாக அதிகாரி உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

*பீகார் தேர்தல்* (12)

பீகார் சட்டமன்ற தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் தொகுதி பங்கீடு இன்று இறுதி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பாஜக மூத்த தலைவர்களுடன் ஐக்கிய ஜனதாதளம், லோக்ஜனசக்தி, ராஷ்டிரிய லோக் மோட்சா உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் புதுடெல்லியில் சந்தித்து, தொகுதி பங்கீடு

குறித்து இறுதி செய்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்று வெளியாகும் என எதிர் பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, பிரதமரும், பாஜக மூத்த தலைவருமான திரு நரேந்திர மோடி இம்மாதம் 15 ஆம் தேதி பீகார் மாநிலத்தில், தனது பூத் அளவிலான கட்சி நிர்வாகிகளுடன் கலந்துரையாட உள்ளார். இது தொடர்பாக தங்கள் ஆலோசனைகளை பகிர்ந்து கொள்ளுமாறும் அவர் சமூக ஊடகப்பதிவில் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜிஎஸ்டி 1 (5)

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு, கடந்த மாதம் 22 ஆம் தேதி மறுசீரமைக்கப்பட்ட ஜிஎஸ்டி அடுத்த தலைமுறை சீர்திருத்தங்கள் சமுதாயத்தின் அனைத்து பிரிவினருக்கும் பயன் அளித்து வருகிறது. இன்று உத்தரபிரதேசத்தின் பல்வேறு தொழில்களை மேம்படுத்தும் ஜிஎஸ்டி குறித்த ஒரு செய்தித் தொகுப்பு.......

(வாய்ஸ்)

ஜிஎஸ்டி 2 (18)

புதிய ஜிஎஸ்டி வரி சீர்திருத்தம் உத்தரபிரதேசத்தின் கைவினைஞர்கள், விவசாயிகள் மற்றும் சிறு நிறுவனங்களுக்கு பெரிதும் ஊக்கம் அளிப்பதாக உள்ளது. திருத்தப்பட்ட ஜிஎஸ்டி வரி

விகிதங்களின்படி, தற்போது பல பொருட்கள் குறைக்கப்பட்ட வரிகளை கொண்டுள்ளன. இதனால் உள்ளூர் தயாரிப்புகள் மிகவும் மலிவு விலையில் கிடைக்கின்றன. இந்த வரி சீர்திருத்தம் மாநிலத்தின் பாரம்பரிய கைவினை பொருட்கள் மற்றும் ஜவுளித் துறைகளுக்கு சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இதனால் லட்சக்கணக்கான தொழிலாளர்களை பணியமர்த்தும் கான்பூர் மற்றும் ஆக்ராவின் தோல் காலனி தொழிற்சாலைகள் பயனடையும். ஏனெனில், 2 ஆயிரத்து 500 ரூபாய் வரை விலை கொண்ட பொருட்கள் தற்போது 5 சதவிகித ஜிஎஸ்டி வரிக்கு உட்பட்டதாக உள்ளது. இதேபோல், லக்னோவின் சிகன்கரி போன்ற கைவினை பொருட்கள் 5 சதவிகித வரிக்கு உட்பட்டுள்ளது. மேலும், வளையல்கள் 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால் இந்த பொருடகள் 6 முதல் 7 சதவிகிதம் வரை மலிவாக உள்ளன. திருத்தப்பட்ட விகிதங்களுடன் அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் நுகர்வோரின் மலிவுத் தன்மையை மேம்படுத்துவதையும், கைவினைஞர்களின் லாபத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாக கொண்டுள்ளது.

செஷல்ஸ்-மோடி (9)

செஷல்ஸ் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள பேட்ரிக் ஹெர்மினிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடிவாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தமது சமூக ஊடகப்பதிவில், இந்திய -செஷல்ஸ் நாடுகளை சேர்ந்த மக்களின் தேவைகளையும், விருப்பங்களையும் வளர்க்கும் வகையில், இந்திய பெருங்கடல் பகுதி அமைந்திருப்பதாக தெரிவித்துள்ளார். இருநாடுகளுக்கும் இடையிலான பன்முக நல்லுறவுகள் காலத்தின் அடிப்படையிலானது என்றும், ஹெர்மினி-ன் பதவிக்காலத்தில் இந்த உறவுகள் மேலும் வலுப்படுவதுடன், சிறந்த எதிர்காலம் உருவாகும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

*மகாபாரதம் தொடர்* 1 (4)

மகாபாரத கலியுகத்தை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் உதவியுடன் மறுவடிவமைப்பு செய்து, அதன் புதிய தொடர் பிரசார் பாரதியின் அதிகாரபூர்வ வேவ்ஸ் ஓடிடி தளத்தில் வெளியிடப்பட உள்ளது. இதுகுறித்த ஒருசெய்தித் தொகுப்பு……

(வாய்ஸ்)

*மகாபாரதம் தொடர்* 2 (10)

(வாய்ஸ்)

கலெக்ட்டிவ் மீடியா நெட்வொர்க்ஸ் தயாரித்துள்ள இந்த தொடர் வரும் 25 ஆம் தேதி வேவ்ஸ் ஓடிடி தளத்தில் பிரத்யேகமாக வெளியிடப்பட உள்ளது, இதனை தொடர்ந்து அடுத்த மாதம் 2 ஆம் தேதி முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 11 மணிக்கு இந்த தொடர் தொலைக்காட்சியில் ஒலிபரப்பாக உள்ளது. அடுத்த தலைமுறைக்கான ஊடக தொழில்நுட்ப உதவியுடன், புதிய கண்டுபிடிப்புகளையும் ஒருங்கிணைத்து மகாபாரத கதாபாத்திரங்கள், போர்க்களங்கள் போன்றவற்றை தத்ருபமாக மறு உருவாக்கம செய்து வெளியிடப்பட உள்ளது. இந்த தொடர் மெக் இன் இண்டியா மற்றும் டிஜிட்டல் இண்டியா திட்டத்தின் உணர்வை பிரதிபலிப்பதாக பிரசார் பாரதி தெரிவித்துள்ளது.

*நிதின் கட்கரி* (12)

புதுச்சேரியில் இந்திராகாந்தி சதுக்கம் முதல், ராஜீவ்காந்தி சதுக்கம் வரை 3.87 கிலோ மீட்டர் நீளமுள்ள உயர்த்தப்பட்ட வழித்தடம் உட்பட பல்வேறு சாலை மேம்பாட்டு பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா நாளை நடைபெற உள்ளது. நிகழ்ச்சியில், மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி பங்கேற்று, அடிக்கல் நாட்ட உள்ளார். மேலும், புதுச்சேரி முதல் பூண்டியாங்குப்பம் வரை ஆயிரத்து 588 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட 38 கிலோ

மீட்டர் நீளமுள்ள, 4 வழிச் சாலையையும் அவர் நாட்டிற்கு அர்ப்பணிக்க உள்ளார். இந்நிகழ்ச்சியில் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, மற்றும் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்க உள்ளனர்.

உலக மூட்டுவலி தினம் 1 (4)

உலக மூட்டுவலி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. வாத மற்றும் தசை கோளாறுகள், அவற்றை தடுப்பது குறித்து மக்களிடையே போதிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது இந்த நாளின் முக்கிய நோக்கமாகும். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு……

(வாய்ஸ்)

உலக மூட்டுவலி தினம் 2 (10)

(வாய்ஸ்)

உலக மூட்டு வலி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. இந்த நாளின் கருப்பொருள் உங்கள் இலக்கை அடையுங்கள் என்பதாகும். புதுடெல்லியில் உள்ள எயிம்ஸ் மருத்துவமனையின் வாதவியல் துறை தலைவர் டாக்டர் உமாகுமார் ஆகாஷ்வாணியில் செய்தியாளரிடம்

கூறுகையில், மூட்டு வலிகளின் அறிகுறிகளை அடையாளம் கண்டு, அவற்றுக்கு முறையாக சிகிச்சை அளிப்பதன் முக்கியத்துவதை எடுத்துரைத்தார். மூட்டுவலி, விரைப்பு, வீக்கம் மற்றும் உடலின் மூட்டுக்களை சுற்றியுள்ள வீக்கம் போன்றவை மூட்டுவலியின் அறிகுறியாகும். சரியான நேரத்தில் சிகிச்சை அளிப்பது இந்த நோயின் தாக்கத்தை வெகுவாக குறைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யுபிஐ (13)

யுபிஐ எனப்படும் ஒருங்கிணைந்த கட்டண செயல்பாட்டு முறையை மாணவர்கள் சேர்க்கை மற்றும் தேர்வுக் கட்டணங்களை வசூலிப்பதற்கு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள பள்ளிகள் முன்வரவேண்டும் என மத்திய கல்வி அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது. நிர்வாக நடைமுறைகளை நவீனப்படுத்தும் நோக்கிலும், பெற்றோர் மற்றும் மாணவர்களுக்கான கட்டணம் செலுத்தும் வசதியை மேம்படுத்துவதற்கும் இந்த நடைமுறை வழிவகுக்கும் என்று மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அமைச்சகம் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், என்சிஇஆர்டி, சிபிஎஸ்இ, மற்றும் கேவிஎஸ் போன்ற தன்னாட்சி அமைப்புகளுக்கு அனுப்பியுள்ள கடித்ததில் பள்ளிகளில் நிதி பரிவர்த்தனையை ஒழுங்குப்படுத்த யுபிஐ, மொபைல்

மூலமான செயலிகள், வங்கி இணையதளம் போன்றவற்றின் மூலம் பணபரிவர்த்தனைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

*விஜயராஜே சிந்தியா* (12)

மறைந்த ராஜமாதா விஜயராஜே சிந்தியாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர். இது தொடர்பாக பிரதமர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், நாட்டு மக்களுக்கு விஜயராஜே சிந்தியா ஆற்றிய சேவைகள் என்றென்றுமெ நினைவில் இருக்கும் என்றும் புகழாரம் சூட்டி உள்ளார். ஜனசங்கம், மற்றும் பாஜக வை வலுப்படுத்தியதில் அவர் முக்கிய பங்காற்றினார் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் கலாச்சார வேர்கள் மீது அவர் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த தாகவும், அவற்றை பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் தொடர்ந்து பாடுபட்டதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா-வும் விஜயராஜே சிந்தியாவிற்கு மரியாதை செலுத்தி, அவரது சேவைகளை பாராட்டி உள்ளார்.

வானிலை (4)

கேரளா, மாகே, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று கனமழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. மேலும், அடுத்த 4 நாட்களுக்கு தமிழகத்தின் அநேக இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.